# 5. 1857 பெருங்கிளர்ச்சி

> **இங்கிலாந்தின் இளைய தலைமுறையினர் இந்தியப் பெருங்கிளர்ச்சி (1857) பற்றிப் படித்து, அந்த அறிவை உள்வாங்கிக்கொள்ள வேண்டும். ஏனெனில்,அதிலிருந்த படிப்பினைகளையும், எச்சரிக்கைகளையும் கற்றுக் கொள்ளலாம்.**
> **- குரோமர் பிரபு**

**திருப்புமுனை**

தென்னிந்தியக் கிளர்ச்சியும் *(1800-1801)*, வேலூர்க் கிளர்ச்சியும் *(1806)* ஆங்கிலேய ஆட்சிக்கெதிரான போராட்டங்களாகும். *1806*லிருந்து *1856* வரை இந்தியாவின் பல பகுதிகளிலும் ஆங்கிலேய ஆதிக்கத்துக்கெதிராகப் பல உள்நாட்டுக் கிளர்ச்சிகள் ஏற்பட்டன. ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பெனி அக்கிளர்ச்சிகளை யெல்லாம் தனது இராணுவ வலிமையால் அடக்கி ஒடுக்கிவிட்டது. எனினும் ஆங்கிலேயரின் அடக்கு முறையும் ஆக்கிரமிப்புக் கொள்கையும் இந்திய ஆட்சியாளரிடையேயும் பிராந்தியத் தலைவர்களிடையேயும், மக்களிடையேயும் மனக்கசப்பை ஏற்படுத்தின. குறிப்பாக டல்ஹௌசி பிரபுவின் இணைப்பாதிக்கக் கொள்கையும், அது செயல்படுத்தப்பட்ட முறையும் மன்னர்களிடையே மனக்கலக்கத்தை உண்டாக்கியது. சுருங்கக்கூறின், ஆங்கிலேயரின் அரசியல் ஆதிக்கம், பொருளாதாரச் சுரண்டல், மனிதாபிமானமற்ற நிர்வாகம், சமுதாய அநீதி, மதமாற்றம், இராணுவ நெறிமுறைகள் ஆகியவை மக்களின் பல்வேறு பிரிவினரிடையே அந்நியருக்கதிரான வெறுப்புணர்வையும் எதிர்ப்புணர்வையும் ஏற்படுத்திவிட்டன. அதன் கூட்டுவிளைவு 1857 பெருங்கிளர்ச்சியாகும். இக்கிளர்ச்சி இந்திய சுதந்திரப் போராட்ட வரலாற்றில் முக்கியத் திருப்பு முனையாகும்.

**கிளர்ச்சிக்கான காரணங்கள்**

**அரசியல் காரணங்கள்**

**டல்ஹௌசியின் பங்கு**

*1857* பெருங்கிளர்ச்சி கவர்னர் ஜெனரல் கானிங் பிரவு *(1856-1862)* காலத்தில் நிகழ்ந்தது. ஆனால் அவருக்கு முன்பு அப்பதவியிலிருந்த டல்ஹௌசி பிரபு *(1848-1856)* அக்கிளர்ச்சிக்கு அடித்தளமிட்டார். அவர் தீவிரமாகப் பின்பற்றிய நில இணைப்புக் கொள்கை(Policy of

Annexation) யும் அவகாசியிலிக் கொள்கை (Doctrine of Lapse) களால் பாதிக்கப்பட்ட இந்திய அரசர்களிடையே பாதுகாப்பின்மையையும் பயத்தையும், பரபரப்பையும் ஏற்படுத்தின. உதாரணமாக, நாநாசாகிப், இலட்சுமிபாய், தாந்தியாதோபே, பகதுர்ஷா ஆகியோர் டல்ஹௌசியின் கொள்கைகளால் பாதிக்கப்பட்டு வெறுப்பின் எல்லைக்கே துரத்தப்பட்டவர்கள். விவசாயிகளைத் திருப்திப்படுத்துவதற்காக அவர் மேற்கொண்ட நிலக்கொள்கை பரம்பரை பலமிக்கவர்களான தாலுக்தார்களை விரோதிகளாக்கியது. அவர் கொண்டுவந்த பல முற்போக்கு சீர்திருத்தங்கள் பிற்போக்கு மனப்போக்குடைய மக்களிடையே சந்தேகத்தையும் சஞ்சலத்தையும் ஏற்படுத்தின. எனவே, டல்ஹௌசி பிரபுவின் நிலஇணைப்பு, அவகாசியிலி, சீர்திருத்த நிர்வாக இராணுவ நடவடிக்கைகள் 1857 பெருங்கிளர்ச்சிக்குக் கணிசமான அளவுக்குக் காரணமாயிருந்தன என்பதில் சந்தேகமில்லை.

**பகதூர் ஷா பட்ட அவமதிப்பு**

இரண்டாவது அக்பரின் வாரிசாக வந்த இரண்டாம் பகதூர்ஷா *(1837-1857)* பெயரளவுக்கு முகலாய பேரரசராக இருந்தாலும் பொதுமக்களால் குறிப்பாக முஸ்லீம்களால், பெரிதும் மதிக்கப்பட்டார். அவருக்கு வயதாகிவிட்டது என்று காரணங்காட்டி அவரது வாரிசாக பக்ருதீன் நியமிக்கப்பட்டபோது பகதூர்ஷாவும், பொதுமக்களும் அதிர்ச்சியடைந்தனர். அதுமட்டுமல்ல, அவர் பல்வேறு கட்டுப்பாடுகளுக்கும் அவமானத்துக்கும் தன்மானக்குறைவான நடவடிக்கைகளுக்கும் உட்படுத்தப்பட்டார். அவருக்குக் கொடுக்கப்பட்டு வந்த சலுகைகள் நிறுத்தப்பட்டன. செலாவணி நோட்டுக்களிலிருந்து அவரது பெயர் நீக்கப்படடது. செங்கோட்டை (Red Fort) யிலிருந்து குத்தப் (Qutab)புக்குக் குடிபெயர்ந்து செல்லுமாறு கட்டளையிடப்பட்டார். பக்ருதீன் அகால மரணமடைந்தபோது புதிய வாரிசு அரச பட்டத்தைச் சூட்டிக் கொள்ளக் கூடாதென தடை விதிக்கப்பட்டது! அவர் டில்லியில் தங்கக்கூடாது என்றும் அறிவிக்கப்ட்டது. அந்நடவடிக்கை தைமூர் குடும்ப வழித்தோன்றல்களுக்கு முற்றுப்புள்ளி வைத்தது. இவையாவும் முஸ்லீம்களிடையே மனக் கொந்தளிப்பை ஏற்படுத்தின. குமுறும் எரிமலை போன்றிருந்த பகதூர்ஷா ஆங்கிலேயர் மீது பழி தீர்த்துக் கொள்வதற்கான தக்க தருணத்தை எதிர்பார்த்திருந்தார்.

**அந்நிய ஆட்சி**

இந்தியர்களுக்கு அந்நிய ஆட்சி புதிதன்று. பல படிப்படியான படையெடுப்புக்களை சந்தித்த நாடு இந்தியா. ஆப்கானியரும்,

முகலாயர்களும் நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக இந்தியாவை ஆட்சி செய்தனர். ஆனால் அவர்கள் அனைவரும் இந்தியரை வெற்றி கொண்டு, இந்தியாவில் நிலையாகத் தங்கி இந்தியரோடு இணைந்து இந்தியரின் நலனுக்காகவும் பாடுபட்டார்கள். ஆனால் ஆங்கிலேயர்கள் வர்த்தகர்களாக இந்தியாவுக்கு வந்து ஆட்சியாளர்களாக மாறித் தங்களது தாய்நாட்டின் வளர்ச்சிக்காக இந்தியாவைச் சுரண்டியவர்கள் இலண்டனைத் தலைமைப் பீடமாக வைத்துக்கொண்டு இந்தியாவை ஆட்சி செய்தவர்கள். இந்தியர்களின் சுகவாழ்வுக்குப் பதில் அவர்களைச் சுரண்டுவதையே அடிப்படைக் கொள்கையாகக் கொண்ட ஆங்கிலேய ஆட்சி மக்களிடையே வெறுப்புணர்ச்சியை வளர்க்கவே செய்தது.

### தீர்க்கதரிசனச் செய்தி

மக்கள் ஆங்கிலேய ஆட்சிக்கெதிரான வெறுப்பையும் கோபத்தையும் அச்சத்தையும் பலகாலம் அடக்கியே வைத்திருந்தனர். அவற்றை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்புக்காகக் காத்திருந்தனர். வாய்ப்புகள் உருவாகும் போதெல்லாம் தங்களது எதிர்ப்பைக் காட்டத் தவறவில்லை. பிளாசிப் போருக்குப் பின் (1757) நூற்றாண்டு முடிவில் (1857) ஆங்கிலேய ஆட்சி வீழ்ச்சியடையும் என்ற தீர்க்கதரிசனச் செய்தி மக்களிடையே புதிய நம்பிக்கையைக் கொடுத்தது. அந்நிய ஆட்சி முடிவுக்கு வருவதற்கான தருணத்தை எதிர்பார்த்தனர். மக்களும் ஆங்கிலேய ஆட்சியால் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்களும், அந்த எதிர்பார்ப்பு அரசியல் அதிருப்திக்கு உணர்ச்சிப் பரிமாணத்தைக் கொடுத்தது.

### பொருளாதாரக் காரணங்கள்

#### வேலையின்மை

இங்கிலாந்து கிழக்கிந்தியக் கம்பெனியின் பொருளாதாரக் கொள்கைகளும் நடவடிக்கைகளும் மக்களிடையே வேலையின்மையை என்றுமில்லா அளவுக்கு அதிகரித்துவிட்டது. ஆங்கிலேயரின் தொழில் கொள்கையால் கிராம குடிசைக் கைத்தொழில்கள் அனைத்தும் நலிந்து அத்தொழில்களில் முழுநேர வேலைசெய்த பல்லாயிரக்கணக்கான கைவினைஞர்களும் பிறரும் வேலையின்றி வாடினர். அதேபோன்று கம்பெனியின் விவசாயக் கொள்கை விவசாயிகளை வறியவர்களாக்கியது. நிலச்சுவான்தார்களின் நிலப்பட்டாக்கள் பரிசீலிக்கப்பட்டபோது பலர் பட்டா உரிமை எதுவுமின்றி நிலச் சொந்தக்காரர்களாக இருப்பது தெரிய வந்தது. அத்தகையோரது நிலங்கள் பறிக்கப்பட்டபோது அவர்கள் நிலமற்ற

ஏழைகளாயினர். நூற்றுக்கணக்கான தாலூக்தார்கள் தரித்திர நாராயணர்கள் ஆனார்கள்! குத்தகையற்ற நிலங்களை அனுபவித்து வந்தோர் பலர். அவர்களது நிலங்கள் பறிக்கப்பட்டபோது அவர்களும் வேலையற்றோர் கூட்டத்தில் தள்ளப்பட்டனர். நாடுகள் இணைக்கப்பட்டவுடன் அரசர்களது படைகள் கலைக்கப்பட்டன. அதன் காரணமாகப் படை வீரர்கள் வேலை இழந்தனர். மேல்நிலை நிர்வாகப் பதவிகளில் இருந்தோரும் பதவிநீக்கம் செய்யப்பட்டனர். வேலையற்றோர் அனைவரும் கிளர்ச்சியில் மகிழ்ச்சியுடன் கலந்து கொண்டனர்.

## நில வருவாய்த் திட்டம்

நிலையான நில வருவாய்த் திட்டம் விவசாயிகளுக்கு நிலையான துன்பத்தைக் கொடுத்தது. இடைத் தரகர்களைத் தவிர்க்கவும், மக்களின் மகிழ்ச்சியைப் பெருக்கவும் கொண்டு வரப்பட்ட அத்திட்டம் தீராத் தொல்லைகளைத் தந்தது. காலப்போக்கில் நிலையான நிலவருவாய் திட்டம் தற்காலிக சுயநலத் திட்டமாயிற்று! நிலத்தின் மதிப்பு சுயாதீனமாய்த் தீர்மானிக்கப்பட்டது. தீர்வை கடுமையாக நிர்ணயிக்கப்பட்டது. அதைவிடக் கொடுமையாக வரி வசூலிக்கப்பட்டது. விவசாயிகளின் துயர்துடைப்பு நடவடிக்கைகள் அவர்களது துயரத்தை அதிகரிக்கவே செய்தன. விளைச்சலுக்கும் நிலவரித் தீர்வைக்கும் தொடர்பின்றி இருந்தது. நிலவரி பணமாக வசூலிக்கப்பட்டதால் மகசூல் பாதிக்கப்பட்ட சமயங்களில் விவசாயிகள் நிலவரி செலுத்த முடியாது நிலைகுலைந்து போயினர். பஞ்ச காலங்களில் விவசாயிகள் பஞ்சைகளாயினர். நிலமதிப்பீடு, நிலத்தீர்வை, நிலவரி வசூல் ஆகியவை கிராம மக்களைக் கிளர்ச்சிக்காரர்களாக்கின.

## வரிச்சுமை

மக்கள் வரிச்சுமையால் அவதியுற்றனர். கம்பெனியின் நிர்வாகச் செலவை மக்களே ஏற்க வேண்டியிருந்தது. ஆங்கிலேயர் இந்தியாவில் மேற்கொண்டபோர்களுக்கான செலவும் மக்களின் தலைமீதே சுமத்தப்பட்டது. இந்தியாவில் வசூலிக்கப்பட்ட வரிதொகையில் பத்து விழுக்காடு இங்கிலாந்தில் செலவிடப்பட்டது. அதற்குப் பிரதிபலனான நன்மைகள் இந்தியருக்குக் கிடைக்கவில்லை. பொது வரிகள் விஷம் போல் ஏறிக்கொண்டிருந்தன. கம்பெனியின் வட்டியோடு கூடிய கடன் மலையளவு வளர்ந்தது. கடனையும் வட்டியையும் வரிமூலம் கட்டியவர்கள் மக்கள்தான். ஆங்கிலேயரின் நில ஆதிக்கக் கொள்கை அரசாங்கத்தின் பணப்பளுவை அதிகரிக்கச் செய்தது. அந்த பளு அனைத்தும் மக்களுக்கே மாற்றப்பட்டது.

சுருங்கக்கூறின், வேலையில்லாத் திண்டாட்டம், நில வருவாய்த் திட்டம், வரிச்சுமை ஆகியவை மக்களிடையே வெறுப்பை வளர்த்து ஆங்கிலேய ஆட்சிக்கெதிராகக் கிளர்ச்சி செய்யத் தூண்டின.

## நிர்வாகக் காரணங்கள்

### நம்பிக்கையற்ற நிர்வாகம்

ஆங்கிலேயரது நிர்வாகம் இந்திய மக்களின் பாரம்பரியத்துக்கும் பண்பாட்டுக்கும் குணத்துக்கும் ஏற்றதாயில்லை. ஆங்கிலேய நிர்வாகிகள் இந்தியாவில் தாமரை இலைத் தண்ணீரைப் போன்று பட்டும் படாமல் இருந்தனர். அவர்களது நாட்டமெல்லாம் இங்கிலாந்திலேயே இருந்தது. எந்தச் சூழ்நிலையிலும் அவர்கள் தங்களது தனித்தன்மையை இழக்கத் தயாராயில்லை. அவர்களது இனப் பெருமையும் கர்வமும், உயர்வு மனப்பான்மையும் இந்தியர்களிடமிருந்து அவர்களை வேறுபடுத்தின. அவர்கள் காட்சிக்கு எளியரல்லர். பொதுமக்கள் அவர்களை எளிதில் நெருங்க முடியாது. மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை நிர்வாகிகள் கவனிக்கவில்லை. நிலப் பரிவர்த்தனைகளில் அதிகாரிகளின் குறுக்கீடு ஆத்திரமூட்டக்கூடிய அளவுக்கிருந்தது. ஆங்கிலேயரது நலனுக்குப் பாதகமாக இருக்கக்கூடிய நிர்வாக முடிவுகளை ஆட்சித் தலைவர்கள் செயல்படுத்துவதில்லை. மக்களின் குறைகளைக் காலத்தே கண்டறிந்து களைவதில்லை. அதனால் மக்களுக்கும் நிர்வாகிகளுக்குமிடையே உள்ள தூரம் அதிகரித்தே வந்தது. மக்கள் நிர்வாகிகளை நம்பவில்லை!

### திறமைக்கு இடமில்லை

கம்பெனியின் நாட்டிணைப்புக் கொள்கையின் விளைவாகக் கல்வி அறிவுடைய, திறமைமிக்க இந்தியர்கள் உயர்பதவிகளை இழந்தனர். கம்பெனி அரசாங்க நிர்வாக அமைப்பில் இந்தியர்களுக்கு இடமில்லை. ஏனெனில், முக்கிய பதவிகளெல்லாம் ஆங்கிலேயர்களுக்கே கொடுக்கப்பட்டன. முகலாயர் ஆட்சியின்போது பல்வேறு பதவிகளிலிருந்த முஸ்லீம்கள் கம்பெனி ஆட்சியின் போது அப்பதவிகளையெல்லாம் இழந்தனர். அவர்கள் நிர்வாகத்தினின்றும் ஒதுக்கி வைக்கப்பட்டனர். நிர்வாகத்தில் சாதர் அமீன், இராணுவத்தில் சுபேதார் ஆகியவைதான் இந்தியர்களுக்குக் கிடைத்த உயர்ந்த பதவிகள்! அப்படியே அப்பதவிகள் கிடைத்தாலும், அதற்கு மேல் பதவி உயர்வு கிடைப்பதற்கு எவ்வித உத்திரவாதமுமில்லை. கல்வியும், தகுதியும் திறமையுமுடைய இந்தியர்களுக்கு நிர்வாக உயர்பதவிக் கதவு மூடப்பட்டபோது அவர்கள் விரக்தியடைந்தனர். விரக்தி கிளர்ச்சிக்கான தீப்பொறியாகும்.

### நீதியற்ற நீதி நிர்வாகம்

ஆங்கிலேய ஆட்சியின்கீழ் கைகள் தங்களுடைய உயிர் உடைமை உரிமை பற்றிய பாதுகாப்பின்றி இருந்தனர். போலீஸ் நிர்வாகம் மக்களை அச்சுறுத்தவும் அடக்கியாளவுமே பயன்படுத்தப்பட்டது. நீதி, நிர்வாகம் அந்நியமாகவும் பணச்செலவு மிக்கதாகவும் காலதாமத மேற்படுத்துவதாகவும் இருந்தது. சமுதாயத்தில் அது சட்டத்தின் ஆட்சியை ஏற்படுத்தவில்லை. ஐரோப்பியர்கள் அதன் அதிகாரத்துக்கு உட்படவில்லை. செல்வந்தர்களும் செல்வாக்கு மிக்கவர்களும் பொய் சாட்சிகளையும் சாட்சியங்களையும் காட்டி தீர்ப்பைத் தங்களுக்குச் சாதகமாகப் பெற்றுக் கொண்டனர். பாதிக்கப்பட்ட ஒரு விவசாயி தனது எஜமானருக்கு எதிராக வழக்கு தொடுப்பதென்பது நினைத்துக்கூட பார்க்க முடியாத ஒன்று. நீதி கிடைக்காத மக்கள் அந்நிய ஆட்சியை நீக்குவதில் நிலைத்து நின்றனர்.

## சமுதாயக் காரணங்கள்

### சமுதாயத் தனிமை

ஆங்கிலேயர்கள் இந்தியர்களுடன் இணைந்து வாழ இயலவில்லை. இந்திய நாட்டில் இந்தியர்கள் சமுதாயத் தனிமைப்படுத்தப்பட்டனர். அவர்கள் கீழ்த்தர மக்களாகக் கருதப்பட்டனர். பொது இடங்களில் மரியாதைக் குறைவாக நடத்தப்பட்டார்கள். பல நேரங்களில் பெண்கள் அவமானத்துக்குள்ளாயினர். ஆங்கிலேயரது பண்பாடு இந்திய சாதி, கூட்டுக்குடும்ப, கிராம சமூக அமைப்பு முறைக்கு முரண்பட்டிருந்தது. ஆங்கிலேயர்கள் சமுதாயப் பழக்கவழக்கங்களில் தலையிடுவதை இந்தியர்கள் விரும்பவில்லை. ஆங்கிலேயரது நீதிமுறை சாதிப் பஞ்சாயத்துக்களை சக்தியிழக்கச் செய்தது. ஐரோப்பியர்கள் சமுதாயச் சமத்துவத்துக்குக் கட்டுப்படவில்லை. இதனால் இந்தியர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்குமிடையே சமுதாய முரண்பாடுகள் அதிகரித்த வண்ணமிருந்தன.

### சமூகச் சட்டங்கள்

ஆங்கிலேயர்கள் கொண்டுவந்த சமூகச் சீர்திருத்தச் சட்டங்களை இந்தியப் பழமைவாதிகள் எதிர்த்தனர். உடன்கட்டை ஏறும் வழக்கத்தைத் தடை செய்தபோது (1829) மக்கள் அரசாங்கத்தை சந்தேகித்தனர். அதேபோன்று சாதி ஏலாநிலை நீக்கச் சட்டம் (1850) இயற்றப்பட்டபோது தாழ்த்தப்பட்டோருக்கு சொத்துரிமை வழங்கிய அச்சட்டத்தை இந்துக்கள் சட்டத்துக்குப் புறம்பானதென்று எதிர்த்தனர். விதவை மறுமணச் சட்டமும் (1856) கடும் கண்டனத்துக்குள்ளாயிற்று. அச்சட்டம் மனு, யாக்ஞ வல்க்கியர் ஆகியோர் வகுத்த சட்டத்துக்கு

விரோதமானதென்று கருதப்பட்டது. ஒருமுறைதான் பிறக்கிறோம், ஒரு முறைதான் மணம் செய்து கொள்கிறோம். ஒரு முறைதான் இறக்கிறோம் எனக்கூறி விதவைகளே அச்சட்டத்தை எதிர்த்தனர்! சமூகச் சடங்குகளிலும் சம்பிரதாயங்களிலும் பழக்க வழக்கங்களிலும் ஆங்கிலேயர் குறுக்கிடுவதைக் குறிப்பாக இந்துக்கள் விரும்பவில்லை.

### சமுதாய மாற்றங்கள்

ஐரோப்பிய நாகரிகத்தைப் புகுத்தி இந்தியச் சமுதாய மாற்றத்தை ஏற்படுத்த ஆங்கிலேயர் எடுத்துக்கொண்ட முயற்சி இந்தியர்களிடையே அச்சத்தையும் அவநம்பிக்கையும் உண்டாக்கிற்று. புதிய கல்வித்திட்டம் பகையுணர்வை வளர்த்தது. புகைவண்டியும், கம்பில்லாத தந்தியும் சூன்யவாதச் சதிச் செயல்களாகக் கருதப்பட்டன! சமுதாய மாற்றங்களால் குறிப்பாக பிராமணர்களும், புரோகிதர்களும் தங்களது பரம்பரைச் செல்வாக்கும், அதிகாரமும் அந்தஸ்த்தும் போய் விடுமோ என்றஞ்சினர். ஆங்கிலக் கல்வியும் உடன்கட்டை ஏறல் தடைச்சட்டமும், விதவை மறுமணச் சட்டமும் குழந்தைக்கொலைத் தடையும் புகைவண்டிகளில் அனைவரும் வேறுபாடின்றி அமர்ந்து பயணம் செய்ய ஏற்பாடு செய்ததும் பாரம்பரிய சமுதாயத்தைச் சீர்குலைத்துவிடுமோ என்று வைதீகர்கள் கவலையுற்றனர்.

## மதக் காரணங்கள்

### மதமாற்றம்

*1813* பட்டயச் சட்டம் (The charter Act of 1813) கிறித்துவ மதப்பிரச்சாரகர்கள் இந்தியாவில் தங்குதடையின்றித் தங்களது பணியைச் செய்ய வழிவகுத்தது. அவர்களது சமயப் பிரச்சாரப் பணி இந்தியாவின் பட்டிதொட்டிகளெங்கும் பரவியது. பல நேரங்களில் மதப் பிரச்சாரக் கூட்டங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களின் ஆதரவில் நடைபெற்றன. மத ஏலாநிலைச் சட்டம் *(1856)* இந்துக்கள் கிறித்துவ மதத்திற்கு மாறுவதை ஊக்குவித்தது. பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் மேற்கொள்ளப்பட்ட மதபோதனை மதமாற்ற உள்நோக்கம் கொண்டது என்று சந்தேகிக்கப்பட்டது. மருத்துவ விடுதிகளிலும் இராணுவத்திலும்கூட கிறித்துவ மதப்பிரச்சாரம் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டது. யாவற்றுக்கும் மேலாக இந்துக்களின் தெய்வங்களையும் தெய்வ நம்பிக்கைகளையும் மதச் சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் நடைமுறைகளையும் கேலியும் நிந்தனையும் செய்து மேற்கொள்ளப்பட்ட பிரச்சாரமும் வெளியிடப்பட்ட புத்தகங்களும் பிரசுரங்களும் இந்துக்களின் மனதைப் புண்படுத்தின. கிறித்துவ மதபோதகர்கள் இந்தியாவையே

கிறித்துவமயமாக்கி விடுவார்களோ என்ற சூழ்நிலை உருவாயிற்று. குறிப்பாக இந்துக்கள் அதை எதிர்க்கத் துணிந்தனர். இந்தியா முழுவதுக்கும் ஒரு இரயில்வேதான் உள்ளது. ஒரு கம்பியில்லாத் தந்தி முறைதான் உள்ளது. ஒரு சட்டமுறைதான் உள்ளது. அதேபோன்று ஒரே மதம்தான் இருக்க வேண்டும். அதுவே 'கிறித்துவ மதம்' என்ற அடிப்படையில் வெளியான 'எட்மாண்டின் கடிதங்கள்' (Edmond`s lettes) எதிர்ப்பாளர்களைக் கிளர்ச்சிக்காரர்களாக்கின.

**இராணுவக் காரணங்கள்**

ஆங்கிலேயர்கள் தங்களது இராணுவ வலிமையால் தான் அவர்களது ஆட்சியையும் ஆதிக்கத்தையும் இந்தியாவில் நிலைநாட்டினர். அச்சஉணர்வை ஏற்படுத்தி இந்தியர்களை அவர்கள் ஆட்டிப் படைத்தனர். ஆனால் ஆப்கானியப் போரில் *(1841-1842)* ஆங்கிலேயர்கள் 20,000 வீரர்களை இழந்து, 50 கோடி ரூபாய் செலவிட்டுத் தோல்வியுற்றது. அவர்களது இராணுவ வலிமையின்மீது விழுந்த பேரிடியாயிற்று. ஆங்கிலேயரது இராணுவம் வெல்ல முடியாதது என்ற மாயை விலகியது. அதேபோன்று கிரிமியப் போரில் *(1854-55)* ஆங்கிலேயர் தோல்வியுற்றதும் ஆங்கிலேய இராணுவத்தையும் தோற்கடிக்க முடியும் என்பதை உறுதிப்படுத்தியது. அத்தோல்விகள் இந்தியச் சிப்பாய்களிடையே புதிய நம்பிக்கையையும் உற்சாகத்தையும் கொடுத்தன.

இந்தியச் சிப்பாய்கள் தங்களது குறைந்த ஊதியம், பதவி உயர்விற்கான வாய்ப்பின்மை, பிற குறையுடைய பணிநிலைகள் பற்றி பெரிதும் அதிப்தியுற்றிருந்தனர். சிறப்புச் சலுகைகள் எதுவுமின்றித் தொலை தூரங்களில் பணியாற்றுவதை அவர்கள் விரும்பவில்லை. கடல்தாண்டி அனுப்பப்படுவதை மேல்சாதி சிப்பாய்கள் வெறுத்தனர். அவர்களுக்கு அளிக்கப்பட்டிருந்த இலவச தபால் சலுகையை நிறுத்தியது *(1854)*. வெளிநாடுகளில் திறமைக் குறைவாகச் செயல்படும் சிப்பாய்களுக்கு ஓய்வூதியமில்லை என்று சட்டம் கொண்டு வந்தது *(1856)* போன்ற நடவடிக்கைகள் சிப்பாய்களிடையே வெறுப்பை வளர்த்தன. திறமையுடன் பணியாற்றிய இந்திய இராணுவ அதிகாரிகளுக்குப் போதிய பதவி உயர்வுகள் அளிக்கப்படாமையால் அவர்களும் மனநிறைவின்றி இருந்தனர். சிப்பாய்களும் அதிகாரிகளும் தங்களிடையே மேற்கொள்ளப்பட்ட மதப்பிரச்சாரத்தாலும், மதமாற்ற முயற்சிகளாலும் சினமுற்றனர். இங்கிலாந்து மேற்கொண்ட பல போர்களின் விளைவாக ஆங்கிலேய இராணுவ வீரர்கள் இந்திய இராணுவத்திலிருந்து பிரிக்கப்பட்டுப்

பிற இடங்களுக்கு அனுப்பப்பட்டனர். அதனால் ஒரு ஆங்கிலேய வீரருக்கு ஐந்து இந்திய சிப்பாய்கள் என்ற விகிதத்திலிருந்தனர். அது சிப்பாய்களுக்குத் துணிச்சலைத் தந்தது. டெல்லி, கான்பூர், அலகாபாத் போன்ற பகுதிகள் சிப்பாய்களின் கட்டுப்பாட்டுக்குள் இருந்தன. இவையாவும் சிப்பாய்கள் ஆங்கிலேய ஆட்சிக் கெதிராகக் கிளர்ச்சி செய்வதற்கான துணிவைத் தந்தன.

**உடனடிக் காரணம்**

1856ல் இந்திய இராணுவத்தில் புதிய என்பீல்டு துப்பாக்கிகள் (Enfield Rifles) அறிமுகப்படுத்தப்பட்டன. டம்டம், அம்பாலா, சியால்கோட் ஆகிய இடங்களில் அத்துப்பாக்கிகளைப் பயன்படுத்துவதற்கான பயிற்சி ஏற்பாடு செய்யப்பட்டது. 1857ல் என்பீல்டு துப்பாக்கியில் செலுத்தப்படும் தோட்டாக்கள் பசு, பன்றி கொழுப்புக் கலவையால் பூசப்பட்டுள்ளன என்ற வதந்தி வங்காள இராணுவ சிப்பாய்களிடையே வேகமாகப் பரவிற்று. துப்பாக்கிக்குள் தோட்டா செலுத்தப்படுமுன் அதன் நுனிபாகத்தை வாயினால் கடிக்க வேண்டியிருந்ததால் இந்து சிப்பாய்களும் முஸ்லீம் சிப்பாய்களும் அருவருப்போடு வெறுத்தனர். பல்வேறு காரணங்களால் நாடு முன்னமேயே முற்றும் எரிமலையாக கொந்தளிக்கும் கடலாக இருந்தது. வெடி மருந்துக் கிடங்காயிருந்த சூழ்நிலையில் கொழுப்பு தடவப்பட்ட தோட்டா பற்றவைத்தத் தீக்குச்சியாய் அதில் விழுந்தது! கிடங்கு வெடித்தது. கிளர்ச்சி துவங்கியது. எனவே 1857 பெருங்கிளர்ச்சி தன்னிச்சையால் எழுந்த தற்செயல் நிகழ்ச்சி அல்ல. மாறாக, அது ஆங்கிலேய ஆட்சிக்கெதிராக எழுந்த எதிர்ப்புணர்ச்சித் தேக்கத்தின் வடிகாலாகும். கொழுப்பு தடவப்பட்ட தோட்டா விவகாரம் அவ்வடிகாலைத் திறந்துவிட்டது அவ்வளவே.

**கிளர்ச்சியின் போக்கு**

1857 ஜனவரி மாதம் கல்கத்தாவுக்கு அருகேயுள்ள டம்டம்மில் கொழுப்பு தடவிய தோட்டாக்கள் பற்றிய வதந்தி துவங்கியது. விரைவில் அது காட்டுத்தீ போல வங்காள சிப்பாய்களிடையே பரவியது. பெர்ஹாம்பூர் சிப்பாய்கள் முதலில் புதிய தோட்டாக்களை வாங்கிக் கொள்ள மறுத்தனர் (பிப்ரவரி 26). இராணுவ அதிகாரி மிட்சிலால் (Mictchell) கண்டிக்கப்பட்ட அவர்கள் அன்று நள்ளிரவில் கூச்சலிட்டுத் தங்களுடைய எதிர்ப்பைத் தெரிவித்தனர். பின்னர் மங்கள் பாண்டே (Mangal Pandey) என்ற பிராமண சிப்பாய் சார்ஜண்ட் மேஜரை நோக்கிச் சுட்டார். லெப்டினன்ட் பௌ படுகாயமுற்றார் (மார்ச்29). பாண்டே மரண தண்டனை பெற்றார்.

பெர்ஹாம்பூருக்கடுத்து மீரட்டில் சிப்பாய்கள் கிளர்ச்சி செய்தனர் (ஏப்ரல் 24). 85 குதிரைப்படை வீரர்கள் தோட்டாக்களைத் தொட மறுத்தனர். அவர்களுக்கு பத்தாண்டு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. அவர்களின் கைகளில் விலங்கிடப்பட்டுப் பயிற்சி மைதானத்தில் பொது மக்களுக்குத் தெரிய நடக்கவிடப்பட்டு அவமானப்படுத்தப்பட்டனர் (மே 9). அடுத்த நாள் அவமதிக்கப்பட்ட சிப்பாய்கள் இருந்த மூன்றாம் குதிரைப் படையினர் சிறைச்சாலையை உடைத்து கைதிகளை விடுவித்தனர். கர்னல் பின்னஸ் கொல்லப்பட்டார். சிப்பாய்களும் விடுவிக்கப்பட்ட குற்றவாளிகளும் ஐரோப்பியர்களைக் கொன்றனர். அவர்களது வீடுகளைக் கொளுத்தினர். அன்றிரவே கிளர்ச்சிக்கார சிப்பாய்கள் மீரட்டை விட்டுவெளியேறி அடுத்த நாள் காலை டெல்லியை அடைந்தனர்.

சுமார் 2000 ஆயுதம் தரித்த மீரட் குதிரைப் படை வீரர்கள் டெல்லியை அடைந்தபோது (மே 11) அவர்கள் உற்சாகமாக வரவேற்கப்பட்டார்கள்! ‘அந்நிய ஆட்சி வீழ்க’, ‘பேரரசர் பஹதூர்ஷா வெல்க’ என்ற கோஷமிட்டனர் கிளர்ச்சிக்காரர்கள். டெல்லியிலிருந்த காலாட்படையினரும் மீரட் கிளர்ச்சிக்காரர்களுடன் சேர்ந்து கொண்டனர்! கர்னல் ரிப்ளையும் பிற ஆங்கிலேய அதிகாரிகளும் கொல்லப்பட்டனர். ஆங்கிலேயரது பங்களாக்கள் தீக்கிரையாயின. செங்கோட்டை (Red Fort) கைப்பற்றப்பட்டது. பஹதூர்ஷா பேரரசரெனப் பிரகடனப்படுத்தப்பட்டார். உயிரினும் மேலான நாட்டையும் மதத்தையும் அந்நிய ஆபத்தினின்றும் காப்பாற்றும்படிப் பேரரசர் பஹதூர் ஷாவும் ஒரு பிரகடனத்தை வெளியிட்டார். 1857 மே 16 அன்று பேரரசர் பஹதூர் ஷாவின் தலைமையில் முறைப்படி டில்லி விடுவிக்கப்பட்டது.

டில்லியின் வீழ்ச்சிக்குப் பிறகு கிளர்ச்சி சூறைக் காற்றென சுழன்றடித்தது. பிரோஸ்பூர், முஸபர்பூர், அலிகார், பஞ்சாப் ஆகிய இடங்களில் சிப்பாய்கள் கிளர்ச்சி செய்தனர். அயோத்தியிலும் வடமேற்கு மாநிலத்திலும் பல கிளர்ச்சிக்கார சிப்பாய்கள் இருந்தனர். சிப்பாய்க் கிளர்ச்சியோடு பொது மக்களும் கிளர்ந்தெழுந்தனர். விரைவிலேயே லக்னோ, பரேலி, கான்பூர், ஆக்ரா, ஜான்ஸி, மத்திய இந்தியா, பந்தேல் கண்டு போன்ற பகுதிகளுக்குக் கிளர்ச்சி வேகமாகப் பரவியது. அங்கெல்லாம் ஆங்கிலேயர்கள் கொல்லப்பட்டனர். அவர்களது உடைமைகள் அழிக்கப்பட்டன.

**கிளர்ச்சி ஒடுக்கப்படல்**

டில்லியின் வீழ்ச்சி ஆங்கிலேயருக்கு அதிர்ச்சியைத் தந்தது. கிளர்ச்சி பரவிய வேகம் அவர்களுக்குக் கவலையைக் கொடுத்தது.

கான்பூரில் ஆங்கிலேயரது குடும்பங்களைப் பாதுகாப்பதாக வாக்களித்து அவர்களை ஈவிரக்கமின்றிக் கொலை செய்த நானாசாகிப்பின் செயல் ஆங்கிலேய அதிகாரிகளின் சினத்தைத் தூண்டியது. கிளர்ச்சியை ஒடுக்குவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டார் கவர்னர் ஜெனரல் கானிங் பிரபு. சீனா நோக்கிச் சென்று கொண்டிருந்த மீட்புப்படை கல்கத்தாவுக்குத் திருப்பப்பட்டது. பஞ்சாபிலிருந்த முதன்மைக் கமிஷனர் ஜான் லாரன்ஸ் முடிந்த அளவு சீக்கிய, ஐரோப்பிய வீரர்களை டில்லிக்கு அனுப்புமாறு கட்டளையிடப்பட்டார். போர் வீரர்களை அனுப்புமாறு இலங்கை ஆளுநரும் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

1857 மே மாத இறுதியில் சென்னையிலிருந்து வந்த கர்னல் ஜேம்ஸ் நீல் அடுத்த மாதமே பனாரஸையும், அலகாபாத்தையும் கிளர்ச்சிக்காரர்களின் பிடியினின்றும் மீட்டார். தளபதி ஹென்றி ஹேவ்லாக், நானாசாகிப்பைப் பல இடங்களில் தோற்கடித்தார். கான்பூருக்குள் நுழைந்து ஹேவ்லாக் இந்தியர்களைப் பழி வாங்கினார். பின்னர் லக்னோவிற்குச் சென்று பல வெற்றிகளைப் பெற்றார். (ஜுலை, ஆகஸ்டு) தளபதி ஜான் நிக்கல்ஸன் நான்கு நாட்கள் தாக்குதலுக்குப் பின்னர் டில்லியை மீட்டார் (செப். 20). பேரரசர் பஹதூர்ஷா சரணடைந்தார். டில்லியை மீட்ட ஐந்து நாட்களில் லக்னோ ஆங்கிலேயர் வசமாயிற்று. ஹேவ்லாக்கும், ஜேம்ஸ் உட்ரோமும் அச்சாதனை புரிந்தனர். பின்னர் பரேலி கைப்பற்றப்பட்டது. அயோத்தியின் உறுதியான எதிர்ப்பு நேபாளத்தின் துணையோடு சர்லிகான் கேம்பல்லால் முறியடிக்கப்பட்டது.

மத்திய இந்தியாவில் கிளர்ச்சியை அடக்கும் பொறுப்பு சர் ஹக்ரோஸ்ஸிடம் விடப்பட்டது. ராணி இலட்சுமிபாய், தாந்தியா தோபே, குன்வார்சிங் ஆகிய மூவரது கூட்டு எதிர்ப்பை ரோஸ் சந்திக்க நேர்ந்தது. ரோஸ் ஜான்ஸி நகரைக் கைப்பற்றியபோது (1858 ஏப்ரல் 3) ராணி இலட்சுமி பாய் கோட்டையைவிட்டு வெளியேறி கல்பிதாந்தியா தோபேயுடன் சேர்ந்து கொண்டார். கிளர்ச்சிக்காரர்களின் துணையுடன் அவர்கள் துணிகரமாகக் குவாலியரைக் கைப்பற்றி நானாசாகிப்பை பேஷ்வாவாகப் பிரகடனப்படுத்தினர்! நானாவும் அவரது ஆதரவாளர்களும் பதவிப் பிரமாணக் கொண்டாட்டங்களில் தங்களது நேரத்தையும் பணத்தையும் பொருளையும் வீணடித்துக் கொண்டிருக்கும்போது ஆங்கிலேயப் படைகள் குவாலியரைச் சூழ்ந்து கொண்டன. ராணி இலட்சுமிபாய் மட்டும் ஆணுடை அணிந்து கிளர்ச்சிக்காரர்களுடன் தீரத்துடன்

போரிட்டார். ஆனால், அவாது குதிரை கால் இடறியபோது கீழே விழுந்தார். விழுந்தவர் எழவே இல்லை. அவரை யாரென்று அடையாளம் தெரியாத ஒருவன் வெட்டிக்கொன்று விட்டான்! கிளர்ச்சிக்காரர்களிலேயே இலட்சுமிபாய்தான் சிறந்த துணிச்சல் மிக்க இராணுவத் தலைவர் என்று ஆங்கிலேயத் தளபதி ரோஸே புகழாரம் சூட்டினார். சம்பல் பள்ளத்தாக்குக்குத் தப்பிச் சென்ற தாந்தியா தோபே மான்சிங் என்பவரால் காட்டிக் கொடுக்கப்பட்டு, பிடிபட்டு தூக்கிலிடப்பட்டார். நானாசாகிப் தனது குடும்பத்தினரோடு நேபாளத்துக்குச் சென்று விட்டார். கிளர்ச்சி அடக்கப்பட்டது.

**தோல்விக்கான காரணங்கள்**

நன்கு துவக்கப்பட்ட கிளர்ச்சி மோசமாகத் தோல்வியடைந்ததற்குப் பல காரணங்கள் இருந்தன. முதலாவதாக, கிளர்ச்சிக்காரர்களுக்கிடையே பொதுவான குறிக்கோள் எதுவுமில்லை. சிப்பாய்களோ, தலைவர்களோ, மக்களோ நாட்டுப்பற்றால் உந்தப்படவில்லை. அவர்களுடைய நோக்கங்கள் பலவாகவும் முரண்பட்டவையாகவும் இருந்தன. இரண்டாவதாக, கிளர்ச்சிக்காரர்களுக்குத் தக்க, திறமையான தலைமை அமையவில்லை. நானாசாகிப் ஆங்கிலேயரைப் பழிவாங்கும் கொடுமைக்காரராகவும் பதவிப் பித்தராகவும் இருந்தார். இலட்சுமிபாய் சிறந்த வீராங்கனை. ஆனால் கிளர்ச்சியை வழிநடத்த அவரால் முடியவில்லை. குன்வார் சிங்கம், தாந்தியா தோபேயும் சலியாது போரிட்டனர். ஆயினும் அவர்களால் கிளர்ச்சியை சரியான திசையில் கொண்டுபோக முடியவில்லை. மௌல்வி அப்துல்லா, பீஹம், தாலுக்தாரர்கள் ஆகியோர் அயோத்தியில் தங்களுக்குள் ஒற்றுமையின்றி கிளர்ச்சிலீடுபட்டனர். சுருங்கக்கூறின், கிளர்ச்சியின் தலைவிதியைத் தீர்மானிக்கத்தக்க தலைவர் எவருமிலர். மூன்றாவதாக, நன்கிணைக்கப்பட்ட கிளர்ச்சித்திட்டம் எதுவுமில்லை. அதனால் கிளர்ச்சிகள் ஆங்காங்கே துவக்கப்பட்டனவேயொழிய அவை யாவும் ஒரு இலக்கு நோக்கிக் கொண்டு செல்லப்படவில்லை. நான்காவதாக, கிளர்ச்சி வடக்கு, மத்திய இந்தியாவோடு நின்றுவிட்டது. அங்கும் சிந்துவும், ராஜபுதனமும் கிளர்ச்சியில் கலந்து கொள்ளவில்லை. தென்னிந்தியக் கிளர்ச்சிக்கும் வேலூர் கிளர்ச்சிக்கும் நிலைக்களனாக இருந்த தென்னிந்தியா இக்கிளர்ச்சியால் பாதிக்கப்படவில்லை. கிளர்ச்சி நகரங்களில் நடைபெற்றதால் கிராமங்கள் ஈடுபாடு கொள்ளவில்லை. ஐந்தாவதாக, இந்திய அரசர்கள் பலர் ஆங்கிலேயரை விசுவாசத்துடன் ஆதரித்தனர். சிந்தியாவும் ஹோல்காரும் ஆங்கிலேயருக்குக் கேடயங்களாகப்

பயன்பட்டனர். குவாலியரில் சர்தின் கர்ராவும், ஹைதராபாத்தில் சர் சலஸர் ஜங்கும் அமைதி காத்தனர். நல்ஹா, பாட்டியாலா, ஜீயித், கபூர்தலா அரசர்கள் தங்களது பகுதிகளில் கிளர்ச்சிகள் தோன்றாதவாறு பார்த்துக் கொண்டனர். கிளர்ச்சிகளை அடக்க கூர்க்காக்கள் உதவினர். ஆப்கானிய தோஸ்த் முகமது நடுநிலை வகித்தார். எட்டாண்டுகளுக்கு முன் இணைக்கப்பட்ட பஞ்சாப்கூட கிளர்ச்சியை ஒடுக்க ஆங்கிலேயருக்குத் துணை நின்றது. இறுதியாக, ஆங்கிலேயரின் தெளிவான குறிக்கோள், பொதுத்திட்டம், மைய அமைப்பு, போர் முறை, வசதிகள், போர் வீரர்களிடையே இருந்த கட்டுப்பாடு, திறமையான தளபதிகளின் சேவை போன்றவை துவக்கத் தோல்விகளை இறுதி வெற்றிகளாக்கின. லாரன்ஸ் சகோதரர்கள் லக்னோவில் ஹென்றி, பஞ்சாபில் ஜான், ராஜபுதனத்தில் ஜார்ஜ், ஹேவ்லாக், ஜேம்ஸ், நீல், ஜேம்ஸ் உட்ராம், காலின் கேம்பல், ஜான் நிக்கல்சன், ஹக் ரோஸ் ஆகியோரின் இராணுவத் தலைமை கிளர்ச்சி அடக்கப்படப் பெரிதும் காரணமாயிருந்தது. கம்பெனி நிர்வாகம் தந்திமூலம் செய்திகளைத் துரிதமாக அனுப்ப முடிந்தது. கடலாதிக்கத்தால் தாய் நாட்டின் ஆதரவை எளிதில் பெற முடிந்தது. கிளர்ச்சி துவங்குவதற்கு முன்பே பாரசீகப் போர் முடிந்தது ஆங்கிலேயருக்கு அனுகூலமாயிற்று.

### கிளர்ச்சியின் தன்மை

1857 பெருங்கிளர்ச்சியின் தன்மை, சிறப்பு பற்றிப் பல்வேறு கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. அவை யாவும் இக்கிளர்ச்சியைப் பற்றிய மூன்று தன்மைகளைக் கோடிட்டுக் காட்டுவனவாக உள்ளன. அவையாவன:

1. சிப்பாய்க் கலகம்
2. மக்கள் கிளர்ச்சி
3. சுதந்திரப் போர்

### சிப்பாய்க் கலகம்

1857 பெருங்கிளர்ச்சி 'பெருமைப்படுத்தப்பட்ட வேலூர் கலகம்' என்று வர்ணிக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட அதிருப்தியுற்ற சிப்பாய்களின் எழுச்சியே 1857 கலகம் என்பது ஒரு சாராரது வாதம். இவர்கள் சமகால ஆதாரங்களின் அடிப்படையில் இந்த முடிவுக்கு வருகின்றனர். ஆரம்பத்திலிருந்து இறுதி வரை அது ஒரு சிப்பாய்க் கலகமே என்று எழுதியது 'எடின்பரோ ரிவ்யூ'. அதே கருத்தை சர் ஜான் லாரன்ஸ், சீலி போன்ற சமகாலத்தவர்கள் எழுதியுள்ளனர். கிஷோர் சந்த் மிஸ்ரா, சம்பு சந்திர முகோபத்தியாயா, ஹரீஸ்

சந்திரமுகர்ஜி, சர் சயது அகமது, ஜீவன்லால் முன்ஷீ, மைனுதீன், துர்காதாஸ் பந்தோபாத்யாயா போன்ற சமகால இந்தியர்களும் இக்கருத்தையே வலியுறுத்தியுள்ளனர். பிரிட்டிஷ் இந்திய சங்கமும் கல்கத்தா முகமடன் சங்கமும் 1857 நிகழ்ச்சியைக் கண்டித்து தீர்மானங்கள் இயற்றின. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் தாதாபாய் நௌரோஜி மக்கள் பங்கேற்காத சிப்பாய்க் கலகம் என்றே கூறினார். இந்திய விடுதலைப் போராட்டத்தைப் பற்றி விரிவாக ஆராய்ந்து எழுதிய ஆர்.சி. மஜூம்தார்கூட ஓரளவு மக்கள் பங்கு பெற்ற, ஆனால் பெரிதும் சிப்பாய்களின் எழுச்சியே 1857 நிகழ்ச்சி என்ற முடிவுக்கு வந்தார்.

**மக்கள் கிளர்ச்சி**

1857-58ல் நடைபெற்ற நிகழ்ச்சிகள் பரங்கியருக்கெதிராகப் பொதுமக்கள் செய்த கிளர்ச்சியே என்பது மற்றொரு சாராரது வாதம். எங்கெல்லாம் ஆட்சி சீர்குலைந்ததோ அங்கெல்லாம் மக்கள் கிளர்ச்சி செய்தனர். கூஜார்கள், ரங்கார்கள், ஜட்குல மக்கள் ஆகியோர் கிளர்ச்சியில் முக்கியப் பங்கேற்றனர். முஸபர் நகர், சஹாரன்பூர், புதௌன், அலிகார், மதுரா, பண்டா, ஹமீர்பூர் போன்ற இடங்களில் ஏற்பட்ட கிளர்ச்சிகளனைத்தும் மக்களால் மேற்கொள்ளப்பட்டவையே. சிப்பாய்க் கலகம் மக்கள் கிளர்ச்சியோடு ஐக்கியப்பட்டுவிட்டது. எனவே 1857ல் ஆங்கிலேய ஆட்சிக்குச் சவாலாக அமைந்த அது மக்கள் கிளர்ச்சியே என்று கூறப்படுகிறது.

சுதந்திரப் போர், 1857 கிளர்ச்சி, இந்திய சுதந்திரப்போர் எனவும் வர்ணிக்கப்பட்டுள்ளது. ஜேம்ஸ் உட்ராம், எட்வர்டு தாம்ப்ஸன், பி.இ.ராபர்ட்ஸ், வி.டி.சவார்க்கர், எ.சி.சாட்டர்ஜி, அசோக மேத்தா, எஸ்.என்.சென் போன்றோர் இக்கருத்தைத் தெரிவித்துள்ளனர். ‘இந்திய சுதந்திரப்போர்’ என்ற தலைப்பில் சவார்க்கர் ஒரு பெரிய நூலையே எழுதியுள்ளார். குறிக்கோள், திட்டம், அமைப்பு, சதிவேலை ஆகியவை இருந்தமையால் 1857 நிகழ்ச்சியை சுதந்திரப் போராட்டம் எனக் கூறலாம் என்பது சவார்க்கர் போன்றோரது வாதம். இந்துக்களும் ஒன்று சேர்ந்து தங்களது நாட்டை அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுவிக்க வேண்டும் என்பதே குறிகோள். சிப்பாய்கள் கொழுப்பு தடவிய தோட்டாக்களை வாங்க மறுத்தது, ஆங்கிலேய அதிகாரிகளைக் கொன்றது, சிறைச்சாலையை உடைத்து கைதிகளை விடுவித்தது, மீரட்டிலிருந்து புறப்பட்டு டில்லிக்கு வந்தது, டில்லையைக் கைப்பற்றியது, பஹதூர் ஷாவைப் பேரரசர் எனப் பிரகடனப்படுத்தியது, பிற இடங்களில் கிளர்ச்சியைத் தோற்றுவித்தது, ஆகியவை நன்கு திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளாகும்.

சிப்பாய்களிடையே ஒழுங்கான அமைப்பிருந்தது. அவர்களது அமைப்பில் மக்கள் தலைவர்களும் சேர்ந்து கொண்டனர். மௌல்வி அஹமதுல்லா, நானாசாகிப், ராணி இலட்சுமிபாய் போன்றோர் கலந்துபேசிச் சதித்திட்டம் தீட்டினர். யாத்திரை என்ற பெயரில் நானாசாகிப் டில்லி, அம்பாலா, லக்னோ, கால்பி, சிம்லா ஆகிய இடங்களுக்குச் சென்று இரகசிய ஆலோசனைகள் நடத்தினார். பக்கீர்கள், மௌல்விகள், பண்டிட்டுகள், சன்யாசிகள் போன்றோர் இரகசியமாகப் பிரச்சாரம் செய்தனர். இலட்சுமிபாய் தனது குடும்பப் புரோகிதருக்கு கிளர்ச்சி பற்றிக் கடிதம் எழுதினார். தாமரைச் சப்பாத்திகள் சிப்பாய்களிடையேயும், மக்களிடையேயும், இரகசியமாக விநியோகிக்கப்பட்டன. டில்லி கைப்பற்றப்பட்ட உடனேயே பஹதூர்ஷா இந்தியப் பேரரசரெனப் பிரகடனப்படுத்தப்பட்டார். எனவே 1857 நிகழ்ச்சி இந்திய சுதந்திரப் போர்தான் எனப் பலர் வாதாடுகின்றனர்.

ஆர்.சி. மஜூம்தார் போன்றவர்கள் இக்கூற்றைப் பலமாக மறுத்துள்ளனர். 1857 போராட்டம் முதல் போராட்டமல்ல; அதில் தேசியம் இல்லை; இந்திய விடுதலை அதன் நோக்கமன்று என்பதை மஜூம்தார் சுட்டிக் காட்டியுள்ளார். அது, அடிப்படையில் ஒரு சிப்பாய் கலகம் அவ்வளவே. பாதிக்கப்பட்ட அரசர்கள், நிலச்சுவான்தார்கள், தாலுக்தார்கள் ஆகியோர் தங்களது சுயநலன்களைப் பாதுகாக்கவே கிளர்ச்சியில் ஈடுபட்டனர். மக்கள் தேசிய உணர்வால் உந்தப்பட்டு கிளர்ச்சியில் கலந்து கொள்ளவில்லை. வெள்ளையனை விரட்ட வேண்டும் என்ற எண்ணத்தில் கிளர்ச்சி செய்தாலும் அது மட்டும் சுதந்திரப் போராகி விடாது. கிளர்ச்சி இந்தியா முழுமைக்கும் பரவவில்லை. சிப்பாய்களும், பொதுமக்களும் ஒருங்கிணைந்து போராடவில்லை. பஹதூர் ஷாவின் பிரகடனமும் பிற பிரகடனங்களும் மதத்தின் அறிப்பை வலியுறுத்தினவேயன்றி நாட்டு விடுதலையைக் கோரவில்லை. போராட்டம் தெளிவான பொது நோக்கோடு, திட்டமிட்டு அமைப்பை ஏற்படுத்தி, பொதுத் தலைமையின்கீழ் நடைபெறவில்லை. பல இடங்களில் இந்து முஸ்லீம்களுக்கிடையே, விவசாயிகள் நிலச்சுவான்தார்களுக்கிடையே, வர்த்தகர்கள், வருவாய்த்துறை ஊழியர்களுக்கிடையே மோதல்கள் ஏற்பட்டுள்ளன. பழைய நிலமானிய முறைக்கும் புதிய முன்னேற்ற முறைக்குமிடையே ஏற்பட்ட மோதலேயன்றி 1857 கிளர்ச்சி இந்திய சுதந்திரப் போராட்டமல்ல. இக்கிளர்ச்சியை கிறித்துவர்களுக்கெதிராக நடத்தப்பட்ட கலகம் என்றும் வெள்ளையருக்கும் கருப்பருக்குமிடையே ஏற்பட்ட இனக்கலவரம் என்றும்

நாகரிகத்துக்கும் அநாகரிகத்துக்குமிடையே நடந்த மோதல் என்றும் பொருளாதாரச் சுரண்டலை எதிர்த்து விவசாயிகள் மேற்கொண்ட வர்க்கப் போராட்டம் என்றும் வாதிப்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதாயில்லை. 1857 கிளர்ச்சி வெறும் சிப்பாய்க் கலகம் மட்டுமன்று; அது இந்திய சுதந்திரப் போராட்டமுமன்று; ஆங்கிலேய ஆட்சியால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட பல்வேறு பகுதியினரும் அந்நிய ஆதிக்கத்துக்கெதிராக பரவலாக மேற்கொண்ட போராட்டமாகும்.

**கிளர்ச்சியின் விளைவுகள்**

இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றின் முக்கிய நிகழ்ச்சியான 1857 பெருங்கிளர்ச்சி கீழ்க்கண்ட விளைவுகளுக்குக் காரணமாயிருந்தது:

1. 1858 நவம்பர் முதல் தேதி பேரரசி விக்டோரியா வெளியிட்ட பிரகடனம் நிலவிணைப்பு, அவகாசியிலிக் கொள்கைகளைக் கைவிட்டு, பிரிட்டிஷ் பேரரசு இந்திய அரசுகளின் சில உரிமைகளை அங்கீகரித்தது. உதாரணமாக, இந்திய அரசர்களின் வாரிசுரிமைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதேபோன்று அவர்கள் கம்பெனியுடன் செய்துகொண்ட ஒப்பந்தங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

2. இந்தியா இங்கிலாந்தின் முடியாட்சியின் கீழ் கொண்டுவரப்பட்டது

3. இந்திய மைய நிர்வாகம் மேலும் பலப்படுத்தப்பட்டது.

4. இந்திய இராணுவத்தில் பெரிய மாற்றங்கள் செய்யப்பட்டன. தனித்தனியாகச் செயல்பட்ட மன்னர் படைப்பிரிவும், கம்பெனிப் படைப்பிரிவும் ஒன்றாக இணைக்கப்பட்டன. ஐரோப்பியப் படைவீரர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது. சீக்கியர் பிரிவு, ஜட் பிரிவு, கூர்க்கா பிரிவு என்று இந்தியச் சிப்பாய்கள் பிரிக்கப்பட்டனர்.

5. பேஷ்வா இரண்டாம் பாஜிராவின் வாரிசு நானாசாகிப் முகலாயப் பேரரசர் பஹதூர்ஷா போன்ற முரண்பாடுகள் நீக்கப்பட்டன.

6. மதசுதந்திரமும் அரசியல் சமூக, அரசியல் நிர்வாக, இனசமத்துவம் வழங்கப்பட்டது.

7. நீதித்துறை சீர்திருத்தம் செய்யப்பட்டு, ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு உயர் நீதிமன்றம் ஏற்படுத்தப்பட்டது.

8. ஆங்கிலேயர்களுக்கும் இந்தியர்களுக்குமிடையே மனக்கசப்பு மேலும் வளரலாயிற்று.

9. கிளர்ச்சியில் முஸ்லீம்கள் தீவிர பங்கேற்றனர் என்பதற்காக அவர்கள் கடுமையாக நடத்தப்பட்டனர். அதனால் அவர்களது முன்னேற்றம் தடைப்பட்டது.

*10.* நிலவிணைப்புக் கொள்கையைக் கைவிட்ட இங்கிலாந்து பொருளாதாரச் சுரண்டல் கொள்கையைக் கட்டவிழ்த்துவிட்டது. இங்கிலாந்தின் புதிய கொள்கை இந்தியரிடையே தேசிய உணர்வுகளை ஊக்குவித்தது. தேசிய உணர்வுபெற்ற இந்தியர்கள் நாட்டு விடுதலைக்குப் போராட அது வழிகோலியது.

**தென்னிந்தியக் கிளர்ச்சியும் 1857 கிளர்ச்சியும்: ஒப்பீடு**

*1800-1801*ல் நடைபெற்ற தென்னிந்தியக் கிளர்ச்சியும், *1857-1858*ல் நிகழ்ந்த பெருங்கிளர்ச்சியும் இந்திய சுதந்திரப் போராட்ட வரலாற்றில் இடம்பெறத்தக்க பெருமைக்குரிய நிகழ்ச்சிகள் என்பதில் ஐயமில்லை. இரண்டுமே ஆங்கிலேய ஆட்சி ஆதிக்கத்துக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட தீர்மானமான, தீவிர, வன்முறைக் கிளர்ச்சிகளாகும். இரண்டு கிளர்ச்சிகளும் கம்பெனி நிர்வாகத்தின் ஆக்கிரமிப்பு, சுரண்டல் கொள்கையின் காரணமாக ஏற்பட்ட மக்களின் மனக்கசப்பின் விளைவுகளேயாகும். இரண்டுமே முடியாட்சி, நிலமானிய நிறுவன மீட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளாகும். இரு கிளர்ச்சிகளும் உட்புற வெளிப்புற நிகழ்ச்சிகளிலிருந்து ஊக்கம் பெற்றன. முதலாவது கிளர்ச்சி திப்பு சுல்தானிடமிருந்தும், பிரெஞ்சுப் புரட்சியாளரிடமிருந்தும் ஊக்கம் பெற்றது. இரண்டாவது கிளர்ச்சி பல்வேறு மலைவாழ் மக்கள் கிளர்ச்சிகள், ஆப்கானியக் கிளர்ச்சிக்காரர்களிட:மிருந்து உற்சாகம் பெற்றது. இரண்டு கிளர்ச்சிகளுமே பரவலான பகுதிக்கு விரிவடைந்தது. தென்னிந்தியக் கிளர்ச்சிக்கு வெற்றிலை விநியோகம் அழைப்பு விடுத்ததைப் போன்று 1857 கிளர்ச்சிக்கு தாமரை சப்பாத்தி விநியோகம் அழைப்புக் கொடுத்தது. இரு கிளர்ச்சிகளுமே முதிராநிலையில் துவங்கப்பட்டுவிட்டன. ஒற்றுமையும் ஒருங்கிணைந்த தலைமையும் இன்மையால் இருகிளர்ச்சிகளும் தோல்வியடைந்தன. *1801*ல் பல அரசர்கள் ஆங்கிலேயரை ஆதரித்தனர்; *1857*ல் பல நிலமானிய சக்திகள் ஆங்கிலேயருக்குத் துணை போயின. இரண்டு கிளர்ச்சிகளும் தோல்வியுற்ற போதிலும் அவை வருங்கால சந்ததியினருக்கு சில சீர்திருத்தங்களையும் படிப்பினைகளையும் விட்டுச் சென்றன.

தென்னிந்தியக் கிளர்ச்சி, *1857* கிளர்ச்சி ஆகியவற்றுக்கிடையே ஒற்றுமைகள் இருந்ததைப் போன்றே வேற்றுமைகளும் இருந்தன. முதல் கிளர்ச்சி அடிப்படையிலேயே அரசியல், பொருளாதாரக் காரணங்களால் ஏற்பட்டது. இரண்டாவது கிளர்ச்சி அடிப்படையிலேயே இராணுவ மதக் காரணங்களால் துவக்கப்பட்டது. தலத்தலைவர்கள், விவசாயிகள் ஆகியோரின்

துணையோடு பாளையக்காரர்கள் நடத்திய கிளர்ச்சி முன்னது. தாலுக்தார்களின் துணையோடு நிலமானிய சக்திகள் மேற்கொண்ட கிளர்ச்சி பின்னது. ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களை மீட்பது, எஞ்சிய நிலங்களை ஆக்கிரமிப்பிலிருந்து காப்பதும் தென்னிந்தியக் கிளர்ச்சியின் நோக்கமாக இருந்தது. ஆங்கிலேயரை வெளியேற்றி தன்னாட்சியை ஏற்படுத்துவது 1857 கிளர்ச்சியின் குறிக்கோளாக இருந்தது. பிராந்தியக் கூட்டமைப்புகள், தென்னிந்தியக் கூட்டமைப்புகள், திண்டுக்கல் சதிபோன்று நன்கு அமைக்கப்பட்ட கட்டுக்கோப்போடு துவக்கப்பட்டது தென்னிந்தியக் கிளர்ச்சியாகும். ஆனால் அதுபோன்ற கூட்டமைப்பை வடஇந்திய கிளர்ச்சித் தலைவர்களால் உருவாக்க முடியவில்லை. 1801 கிளர்ச்சியில் பொதுமக்கள் பங்கேற்பு அதிகமாக இருந்தது. 1857 கிளர்ச்சியில் சிப்பாய்களின் பங்கே பிரதானமாயிருந்தது. தென்னிந்தியக் கிளர்ச்சியைவிட 1857 கிளர்ச்சி வன்முறையிலும், பழிவாங்கும் போக்கிலும், அழிவிலும் விஞ்சி நின்றது.

# 7. இந்திய தேசியத்தின் தோற்றம்

> பிறரை ஒதுக்கிவைக்கும் விலக்கல் தேசியம் உடனடி அரசியல் ஆதாயங்களைத் தரலாம். ஆனால் அது நாட்டின் சமுதாய அமைப்பைச் சரிசெய்ய முடியாமல் சேதப்படுத்தி விடும்.
>
> - ரொமிலா தாப்பர்.

தேசியம் என்பது தேசத்தைப் பற்றிய தன்னுணர்ச்சி விழிப்பாகும். அது மனிதனோடு உடன் பிறந்த பண்பல்ல. அவனது இயல்பான மனநிலையும் அல்ல அது. தேசியம் என்பது மனிதன் விரும்பி வளர்த்துக் கொள்ளும் உணர்ச்சியாகும். அரசியல், பொருளாதார, இன, மொழி, கலாச்சார, சமுதாய, சமயச் சூழ்நிலைகள் ஒரு நாட்டு மக்களைத் தேசிய உணர்வு கொள்ளச் செய்கிறது. இந்தியாவைப் பொறுத்தவரை தேசியம் என்பது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் எதிர்மறை விளைவாகும். ஆங்கிலேய ஆதிக்க எதிர்ப்பே இந்திய தேசியமாக வடிவெடுத்தது. அந்நியருக்கு அடிமைப்பட்டிருந்த மக்களிடையே விழிப்பை ஏற்படுத்தி, அவர்களுடைய விடுதலை வேட்கையை தூண்டி விடப்பட்ட போது தேசியம் மலர்ந்தது. துவக்கத்தில் காலனி ஆதிக்க எதிர்ப்பே தேசியத்தின் இயல்பாக இருந்தது. காலப்போக்கில் ஆங்கிலேய ஆட்சிக்கெதிராகத் தோன்றிய தேசியம், அதோடு போராடி, போரிட்டு இறுதியில் அதை இந்திய மண்ணிலிருந்தே அகற்றியது, இந்தியா விடுதலையடையக் காரணமாக இருந்தது.

### காரணங்கள்

இந்திய தேசியம் ஒரே நாளில் உருவான உலக அதிசயங்களில் ஒன்றல்ல. மாறாக, அது நீண்ட காலமாகப் பல்வேறு காரணங்களின் ஒருமித்த விளைவால் தோன்றிய பொது உணர்ச்சியாகும். இந்திய தேசியம் தோன்றியதற்கு முக்கிய காரணங்களாவன.

#### அடிப்படை ஒற்றுமை

இந்திய தேசியம் பற்றிய எண்ணம் ஆங்கிலேயர்கள் இந்தியாவுக்கு வருவதற்கு நெடுங்காலத்துக்கு முன்பிருந்தே இந்தியர்களிடம் இருந்து வந்தது என்று கூறப்படுகிறது. இந்தியப் புவியியல் ஒருமை, பண்பாட்டுப் பொதுமை, இன ஒற்றுமை, பாரதவர்ஷா என்ற

தாய்நாட்டுப் பற்று, சமய வழக்காறுகள், அரசியல் அனுபவங்கள், வரலாற்று விளைவுகள் ஆகியவை இந்தியரின் அடிப்படை ஒற்றுமையை உருவாக்கின. அந்த அடிப்படை ஒற்றுமை முகலாய ஆட்சியின்போது மங்கிப் போயிற்று. பதினேழாம் நூற்றாண்டில் மராத்தியரது எழுச்சியால் இந்தியரின் ஒற்றுமை உணர்வு மறுவாழ்வு பெற்றது. அந்த உணர்வே பத்தொன்பதாம் நூற்றாண்டில் பொது வடிவம் கண்டது; அரசியல் உருவம் கொண்டது.

### நவீன நாட்டமைப்பு முறை

ஆங்கிலேயர்கள் இந்தியாவுக்கு வந்தபின்னர் நவீன நாட்டமைப்பு முறை (Modern State System) ஏற்படுத்தப்பட்டது. இந்தியா 'இந்திய இந்தியா', பிரிட்டிஷ் இந்தியா என்று பிரிக்கப்பட்டது. அளவிலும், முக்கியத்துவத்திலும் வேறுபட்ட 562 இந்திய நாடுகளும் பிரிட்டிஷ் முடியாட்சியின் மேலாதிக்கத்தை ஏற்றுக் கொண்டனர். இந்திய அரசர்களுக்கும் ஆங்கிலேய ஆட்சிக்குமிடையே ஏற்பட்ட தொடர்பால் இந்திய நாடுகளிடையே பொதுவான அரசியல் அமைப்பு முறை புகுத்தப்பட்டது. அதேபோன்று பிரிட்டிஷ் இந்தியப் பகுதிகளிலும் சட்டத்தின் ஆட்சி பிரதிநிதித்துவ முறை, நிதித்துறை, வருவாய்த்துறை போன்ற நவீன நாட்டமைப்புக் கூறுகள் புகுத்தப்பட்டன. இந்த நவீன நாட்டமைப்பு முறை ஆங்கிலேய ஆட்சி அகற்றப்படுவதற்கான தேசிய விதையைச் சுமந்திருந்தது!

### மைய நிர்வாக முறை

இந்தியா முழுவதும் ஆங்கிலேய மைய நிர்வாக முறையின் கீழ்க்கொண்டு வரப்பட்டது. அகில இந்தியப் பொதுப் பணியும் (ICS) சட்டத் தொகுப்பும், சட்ட நிர்வாகமும் மக்கள் அனைவரும் ஒரு முறையின்கீழ் வாழ வேண்டும் என்று வலியுறுத்தின. புகைவண்டி மூலம் மக்கள் இந்தியாவின் ஒரு கோடியிலிருந்து மறுகோடிக்கு விரைவாகச் சென்றனர். தபால் தந்தி மூலம் செய்திப் போக்குவரத்து துரிதப்படுத்தப்பட்டது. இவற்றால் நாட்டின் பல பகுதிகளுக்கிடையே பொருளாதார, சமுதாய அரசியல் இணைப்புகள் ஏற்பட்டன. மக்கள் இந்தியாவை நேசிக்கத் தலைப்பட்டனர். எல்லோரும் இந்நாட்டு மக்கள் என்ற பொதுமை எண்ணம் அவர்களிடம் எழுந்தது.

### ஆங்கிலக் கல்வியின் தாக்கம்

இந்தியரிடையே தேசிய விழிப்புணர்ச்சிக்கு ஆங்கிலக் கல்வி முக்கிய காரணமாயிருந்தது. மேலைநாட்டு முற்போக்குக் கருத்துக்களும் தாராளக் கொள்கைகளும் இந்தியாவினுள்

தங்குதடையின்றிப் பாய்வதற்கான மடையைத் திறந்துவிட்டது ஆங்கிலக் கல்விதான். ஆங்கிலக் கல்வி பெற்றோர் பென்தம், லாக், ஹாப்ஸ், மில், ஸ்பென்ஸர், பகிர், ரஸ்கின், கார்லைல், வால்டேர், ரூஸோ, மாண்டஸ்கியு, டால்ஸ்டாய் போன்ற சிந்தனையாளர்களின் புரட்சிக் கருத்துக்களுக்கும் கொள்கைகளுக்கும் கோட்பாடுகளுக்கும் அறிமுகமாயினர். உரிமை, சமத்துவம், சகோதரத்துவம், விடுதலை, தேசியம், சுயாட்சி பற்றிய அரசியல் சித்தாந்தங்களால் கற்றோர் ஊக்குவிக்கப்பட்டனர். மேலைநாட்டு வரலாறு, இலக்கியம், தத்துவம், விஞ்ஞானம் ஆகியவை ஆங்கிலக் கல்வி பெற்றவர்களிடையே மனக் கிளர்ச்சியை ஏற்படுத்தின. அனைவருக்கும் பொதுவான ஆங்கிலக் கல்வி, பொது மனப்போக்கு, எண்ணங்கள், உணர்ச்சிகள் உருவாகக் காரணமாயிருந்தது. ஆங்கிலக் கல்வி பெற்றோரே நாடு தழுவிய விடுதலைப் போராட்டத்தைத் துவக்கினர்.

### மேலைப் பண்பாட்டின் செல்வாக்கு

பகுத்தறிவு, எண்ணச் சுதந்திரம், தனியுரிமை, தாராளக் கொள்கை ஆகியவற்றின்மீது அமைந்ததே மேலைப் பண்பாடாகும். அதன் செல்வாக்கால் வழக்காறு, மூடநம்பிக்கை, சீர்திருத்த எதிர்ப்பு ஆகியவற்றின்மீது அமைந்ததே மேலைப் பண்பாடாகும். அதன் செல்வாக்கால் வழக்காறு, மூடநம்பிக்கை, சீர்திருத்த எதிர்ப்பு ஆகியவற்றின்மீது அமைந்திருந்த இந்தியப் பண்பாடு மாற்றமடைந்தது. குருட்டு நம்பிக்கையைப் பகுத்தறிவு வென்றது. பரம்பரை ஆதிக்கச் சக்திகளின் பிடியிலிருந்து மனிதன் விடுபட்டான். சமுதாய நீதி, பொருளாதாரச் சமத்துவம், அரசியல் உரிமைகள் பற்றிய புரட்சிகரமான சித்தாந்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. மேலைப் பண்பாட்டின் செல்வாக்கால் சமயமும், சமுதாயக் கருத்துக்களும், நடைமுறைகளும் மாறத் தொடங்கின. சமுதாய, சமயச் சீர்கேடுகள் களையப்படுவதற்கான சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இந்தியக் கல்வி, மொழி, இலக்கியம், சமுதாயம், சமயம் ஆகிய அனைத்துத் துறைகளும் மேலைப் பண்பாட்டால் பாதிக்கப்பட்டன. இவற்றின் விளைவாக, மக்களிடையே நாட்டுப்பற்றும் தேசிய உணர்வும் உண்டாயின.

### சமுதாய சமய விழிப்புணர்வு

19ஆம் நூற்றாண்டில் மேலைப் பண்பாட்டுச் சவாலைச் சமாளிப்பதற்காக எழுந்தவையே சமுதாய, சமயச் சீர்திருத்த இயக்கங்கள் ஆகும். அவை அனைத்தும் தேசியத்தின் தோற்றத்தைத் துரிதப்படுத்தின. ராஜாராம் மோகன் ராய், கேசவ் சந்திரசென், சுவாமி

தயானந்த சரஸ்வதி, சுவாமி விவேகானந்தர், டாக்டர் அன்னிபெசன்ட் அம்மையார் ஆகியோர் இந்தியாவின் பெருமையை மூலைமுடுக்கெல்லாம் பறை சாற்றினர். பாரதத்தின் பண்டைய பண்பாட்டின் பெருமையைப் புகழ்ந்தனர்; வேத, உபநிடத, இதிகாசச் சிறப்பை எடுத்துக் காட்டினர். மக்களிடையே வீரத்தையும் தன்னம்பிக்கையையும் சுயசார்புடைமையையும் உருவாகச் செய்தனர். தாய்நாட்டின்மீது தனிப்பற்றுக் கொள்ளக் காரணமாயிருந்தனர். பிரம்ம சமாஜம், பிரார்த்தனா சமாஜம், ஆரிய சமாஜம், ராம கிருஷ்ண இயக்கம், பிரம்ம ஞான சபை ஆகியவை சமய சமுதாய சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு இந்திய மறுமலர்ச்சியை ஏற்படுத்தின.

### அறிவு ஜீவிகளின் பங்கு

ஆங்கிலக் கல்வியின் பயனாக ஆயிரக்கணக்கான இந்திய அறிவு ஜீவிகள் உருவாயினர். வில்லியம் பெண்டிங் பிரபு ஆங்கிலத்தை ஊக்குவித்த ஐம்பதாண்டுகளில் இந்தியாவில் அறிவு ஜீவிகள் என்ற புதிய வகுப்பார் தோன்றினர். அவர்கள் நிர்வாகத்தின் உயர் பதவிகளில் அமர்ந்தனர். வாழ்வின் பல துறைகளிலும் பெருமைக்குரிய நிலை பெற்றனர். பொது இயக்கங்களை முன்நின்று நடத்தினர். கல்கத்தா, பம்பாய், சென்னை, பூனா போன்ற நகரங்களில் அவர்களது அறிவும் திறமையும் அமைப்பாற்றலும் சுடர்விட்டுப் பிரகாசித்தன. அவர்கள்தான் பத்திரிக்கைகள் நடத்தினர். சமுதாயச் சீர்திருத்தச் சங்கங்களையும் அரசியல் அமைப்புகளையும் ஏற்படுத்தி இந்திய தேசிய சுடர்விளக்கைத் தூண்டி விட்டனர்.

### புதிய பொருளாதார வகுப்பினர்

நிலத் தனியுடைமை, தொழிற்சாலை முறை, செய்தி, சாலைப் போக்குவரத்து வசதிப் பெருக்கம் ஆகியவை தற்சார்புடைய தேக்கமுற்ற கிராமப் பொருளாதார முறையை மாற்றி அமைத்தன. மொத்த வியாபாரிகள், சில்லறை வியாபாரிகள், ஏஜண்டுகள், தரகர்கள், குத்தகைதாரர்கள், வங்கியாளர்கள், தொழிலதிபர்கள், பண்ணையார்கள், நிலச்சுவான்தார்கள் ஆகிய புதிய பொருளாதார வகுப்பினர் தனித்தன்மையோடு தோன்றினர். ஆங்கிலேயரின் ஆதிக்க பொருளாதார சுரண்டல் கொள்கைகளால் அவர்களது நலன்கள் பாதிக்கப்பட்டபோது இப்புதுப் பொருளாதார வகுப்பார் அந்நிய ஆட்சிக்கெதிராகத் திரும்பினர். அவர்கள் தங்களுக்குள் அமைப்புகளை ஏற்படுத்திக் கொண்டு தேசஅளவில் ஒன்றுபட்டு, ஆங்கில ஏகாதிபத்தியத்துக் கெதிரான இயக்கங்களை ஆதரித்தனர். அவர்கள் வங்காளம், பம்பாய், சென்னை போன்ற கடற்கரைப் பகுதிகளில்

சுறுசுறுப்பாக இயங்கினர். இந்திய தேசிய எழுச்சிக்கு இப்புதிய பொருளாதார வகுப்பாரின் பணி பெரிது.

**வரலாற்று ஆராய்ச்சியின் விளைவு**

ஐரோப்பியரது வருகைக்கு முன் இந்தியர்கள், தாமரைத் தடாகத்துத் தவளைகள் போன்று தங்களது தாய்நாட்டின் பெருமை அறியாதிருந்தனர். மேலைநாட்டாரின் வரலாற்று ஆராய்ச்சியின் விளைவாக இந்தியாவின் புகழும் பெருமையும் வெளிப்பட்டன. சர் வில்லியம் ஜோன்ஸ், பிரிப்செப், கோல்புரூக், மாக்ஸ் முல்லர், மோனியர் வில்லியம்ஸ், வில்சன், பெர்கூஸன் ஆகியோரது அயராத ஆராய்ச்சி முயற்சிகள் இந்தியாவின் பண்டைப் பெருமைகளை வெளிக்கொணர்ந்தன. ராஜேந்திரலால் மித்ரா, ராமகிருஷ்ணா, கோபால் பந்தர்கார், ஹர்பிரசாத் சாஸ்திரி, எம்.ஜி.ரானடே ஆகிய இந்திய வரலாற்று ஆராய்ச்சியாளர்களின் முயற்சியும் பாரதத்தின் பெருமையைப் பறைசாற்றின. அலேக்சாந்தர் கன்னிங்ஹாமின் தலைமையின்கீழ் மேற்கொள்ளப்பட்ட புதைபொருள் ஆராய்ச்சிகள் பழங்கால இந்தியா கிரேக்கத்துக்கும், ரோமுக்கும் எவ்விதத்திலும் குறைந்ததில்லை என்பதை உறுதிப்படுத்தியது. இவற்றால் இந்தியர்கள் தங்களது தாய்நாட்டின் பழங்காலப் பெருமையிலும் எதிர்கால வளர்ச்சியிலும் மகிழ்ச்சியும் நம்பிக்கையும் கொண்டனர்.

**இந்திய இலக்கியத்தின் செல்வாக்கு**

ஆங்கில இலக்கியத் தாக்கத்தால் இந்திய மொழிகளில் இலக்கிய மறுமலர்ச்சி ஏற்பட்டது. இலக்கிய மறுமலர்ச்சித் தென்றல் வங்காளத்தில் உருவாகிப் பின்னர் இந்தியாவின் பிற பகுதிகளுக்குப் பரவியது. அன்றைய இலக்கிய உலகில் பக்கிம் சந்திர சாட்டர்ஜியின் 'ஆனந்த மடம்' பெரிய பரபரப்பை ஏற்படுத்தியது. அந்த நாவலில்தான் நாட்டுப் பற்றுமிக்க 'வந்தே மாதரம்' என்ற பாடல் இடம் பெற்றது. தீனபந்து மித்ராவின் புகழ்மிக்க நாடகமான நீலதர்பானா அவுரிச் சாகுபடியாளர்களது அவலங்களைப் பிரதிபலித்தது. ஹேம் சந்திர பானர்ஜியின் உணர்ச்சிப் பாடல்கள் வங்காள இளைஞர்களிடையே எழுச்சியை ஏற்படுத்தின. பிரேம் சந்தின் படைப்புகள் சீர்திருத்தக் கருத்துக்களின் படையெடுப்புகள், ரவீந்திரநாத் தாகூர் தொடாத இலக்கியப் பிரிவே இல்லை. அவரது செல்வாக்கும் இலக்கியச் செல்வாக்கும் இந்தியரின் உள்ளங்களில் தேசிய விதைகளை விதைத்தன. தமிழ்நாட்டில் இராமலிங்க அடிகளாரின் திருஅருட்பா மக்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டன. டாக்டர் கால்டுவெல்லின் ஒப்பிலக்கணம், ஆன்டர்சனின் 'தமிழ இலக்கண அடிப்படை' வின்ஸ்லோவின் ஆங்கில தமிழ்

அகராதி, ஜி.யு.போப்பின் திருக்குறள், திருவாசகம், மணிமேகலை ஆங்கில மொழி பெயர்ப்புகள் தமிழின் மேன்மை, மென்மை, தொன்மை ஆகியவற்றை வெளியுலகுக்கு அறிமுகம் செய்தன. தமிழர்கள் தலைநிமிர்ந்து நின்றனர்.

### பத்திரிக்கைகளின் பங்கு

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்தியதேசியம் தோன்ற பத்திரிக்கைகள் பெரிதும் உதவின. ஒரே சமயத்தில் பத்திரிகைகளின் பல்லாயிரக்கணக்கான பிரதிகள் பல இலட்சக் கணக்கான வாசகர்களைச் சென்றடைந்தன. அமிர்த பஜார் பத்திரிகா, இந்தியன் மிர்ரர், பாம்பே சமாச்சார், இந்து, சுதேச மித்திரன், ஆந்திர பத்திரிகா, கேரள பத்திரிகா போன்ற பத்திரிக்கைகள் மக்களுக்கு அரசியல் கல்வி அளித்தன. மக்களாட்சி, மக்கள் உரிமைகள், சுயாட்சி, சட்டத்தின் ஆட்சி போன்ற அரசியல் கோட்பாடுகளை மக்களுக்கு அவை அறிமுகம் செய்தன. அரசியல் அமைப்புகள், தலைவர்களின் நடவடிக்கைகள் விரிவாகப் பிரசுரிக்கப்பட்டன. மக்களின் பிரச்சனைகளும், கோரிக்கைகளும் எடுத்துக் கூறப்பட்டன. அரசாங்கத்தின் தவறான கொள்கைகளையும் போக்குகளையும் பத்திரிகைகள் அருமையாக விமரிசனம் செய்தன. இவையாவும் இந்தியரிடையே அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தின.

### இந்து மேளா

1886ஆம் ஆண்டில் வங்காளத்தில் ரிஷி ராஜ் நாராயண் போஸ் தேசிய உணர்ச்சிப் பெருக்கச் சங்கம் (Society for the Promotion of National Feeling) ஒன்றைத் துவக்கினார். அவரது முயற்சியால் உந்தப்பட்ட நபகோபால் மித்ரா 'இந்து மேளா'வை ஆரம்பித்தார் (1867), அவர் 'தேசிய நப கோபால்' என்றழைக்கப்பட்டார். இந்து மேளா ஒரு தேசியத் திறமைகளின் சங்கமமாகும். அந்த மேளாவில் நாட்டுப்பற்றைத் தூண்டக்கூடியக் கவிதைகள் பாடப்பட்டன; இந்திய அரசியல், பொருளாதார, சமுதாய, சமயநிலைகள் பற்றி சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன; இந்தியக் கலைகள், கைத்தொழில்கள் பற்றிய கண்காட்சிகள் வைக்கப்பட்டன; உடற்பயிற்சிகள் செய்து காண்பிக்கப்பட்டன. அகில இந்தியக் கண்ணோட்டத்தோடு வங்காள இந்துக்களால் நடத்தப்பட்ட இந்த இந்து மேளாக்கள் பின்னர் வெள்ளமெனப் பெருகிப் பிரவாகமெடுத்து இந்திய தேசிய நீரோட்டத்தில் இரண்டறக் கலந்தன.

### வெளிநாட்டு விடுதலைப் போராட்டங்களின் பாதிப்பு

அமெரிக்க விடுதலைப் போராட்டம், பிரெஞ்சுப் புரட்சி பற்றி

எழுதப்பட்ட நூல்கள் ஆங்கிலக் கல்வி பயின்றோரைக் காந்தக் கட்டிகளாய்க் கவர்ந்தன. 1822 லிருந்து 1830 வரை துருக்கி, ஸ்பெயின், போர்ச்சுகீசிய பேரரசுகளிடமிருந்து விடுதலை பெற்ற சுமார் பன்னிரெண்டு நாடுகளின் போராட்டங்கள் இவர்களிடையே நாட்டுப்பற்றை அதிகரித்தன. குறிப்பாக கிரேக்கம், இத்தாலி அயர்லாந்து விடுதலைப் போராட்டங்கள் இந்தியரிடையே சுதந்திர தாகத்தை ஏற்படுத்தின. 1830லிருந்து 1848 வரை ஐரோப்பாவில் நடைபெற்ற புரட்சிகள் இந்தியரது இதயங்களில் எதிரொலித்தன. ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்ற இந்தியர்கள் அங்கு நடைபெற்ற தேசிய இயக்கங்களைப்பற்றி அறிந்துகொண்டு வந்து தங்களது அனுபவங்களைப் பிறருடன் பகிர்ந்து கொண்டனர். அதோடு ஐரோப்பிய அரசியல் அமைப்புகள் பற்றியும் அறிந்து வந்தனர். இவையாவும் இந்திய தேசியத்தை ஊக்குவிக்க உதவின.

### அந்நியப்பட்ட இந்திய இளைஞர்

கல்கத்தா, பம்பாய், சென்னை பல்கலைக் கழகங்கள் துவக்கப்பட்ட பின்னர் பல அறிவுக் கூர்மையும் திறமையும் ஆர்வமுமிக்க இளம் பட்டதாரிகள் உருவாயினர். தக்க வேலைவாய்ப்புகளின்மையால் அவர்கள் ஏமாற்றமுற்றனர். நிர்வாக உயர் பதவிகளெல்லாம் ஆங்கிலேயருக்கு ஒதுக்கப்பட்டிருந்தன. நிர்வாகக் கீழ்ப் பதவிகளிலும் ஆசிரியப் பணிகளிலும் அமர்த்தப்பட்டோர் ஊதிய உயர்வும் பதவி உயர்வுமின்றி மனக்கசப்படைந்தனர். 1833 பட்டயச் சட்டத்திலும் 1858 பேரரசியார் பிரகடனத்திலும் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் காற்றில் பறக்கவிடப்பட்டன! இந்திய உயர் நிர்வாகப் பதவி வகித்த சுரேந்திர நாத் பானர்ஜி அநியாயமாகப் பதவிநீக்கம் செய்யப்பட்டது, பல்கலைக் கழக பட்டதாரிகளுக்குப் பேரிடியாக இருந்தது. இந்தியா முழுவதும் சூறாவளிச் சுற்றுப்பயணம் செய்த பானர்ஜி அந்நியப்பட்டுப் போயிருந்த இளைஞர்களை ஒன்று சேர்த்து இந்திய சங்கத்தை தோற்றுவித்தார். அதன் விளைவாகத் தேசப்பற்றும் இந்திய விடுதலை வேட்கையும் கொண்ட இளைஞர் இயக்கம் உருவாயிற்று.

### பொருளாதாரச் சுரண்டல் கொள்கை

வர்த்தகர்களாக இந்தியாவுக்கு வந்த ஆங்கிலேயர் சூழ்நிலைகளின் சதியால் ஆட்சியாளர்களானார்கள். இங்கிலாந்துக்கு மூலப்பொருள்களை ஏற்றுமதி செய்து, அந்நாட்டின் செய்பொருள்களை இறக்குமதிசெய்யும் நாடாக இந்தியா பயன்படுத்தப்பட்டது. இந்தியாவின் முக்கியச் சுரங்கங்கள், மில்கள், தொழிற்சாலைகள், காப்பி தேயிலைத்தோட்டங்கள் அனைத்தும் ஆங்கிலேயர் வசமிருந்தன. கப்பல், புகைவண்டிப் போக்குவரத்தும்

வங்கிகளும் அவர்கள் வசம் இருந்தன. கனரகத் தொழில்களின் பெருக்கத்தால் கிராமக் கைத்தொழில்கள் செயலற்றுப் போயின. பல்லாயிரக்கணக்கான கைவினைஞர்கள் வேலையிழந்தனர். விவசாயம் தேக்கமுற்றது. காட்டுச் சட்டங்கள் (Forest Laws) கடுமையாகச் செயல்படுத்தப்பட்டன. வரிகள் கடுமையாக விதிக்கப்பட்டுக் கொடுமையாக வசூலிக்கப்பட்டன. வீண் ஆடம்பரச் செலவும், கையூட்டு ஊழலும் தலைவிரித்தாடின. ஆங்கிலேயர்கள் ஏராளமான பணத்தை இங்கிலாந்துக்கு அனுப்பி வைத்தனர். அரசாங்கக் கடன் அத்துமீறி உயர்ந்தது. இப்பொருளாதாரச் சுரண்டலின் எதிர்விளைவே இந்திய தேசிய எழுச்சியாகும்.

**இனஇறுமாப்பு**

ஆக்கிரமிப்பால் கைப்பற்றிய இந்தியாவை ஆணவத்துடன் ஆண்டனர் ஆங்கிலேயர். இந்தியாவை நிர்வகிப்பது 'வெள்ளையரின் பளு'வாகக் கொண்டனர். இந்தியர் சொந்த நாட்டில் அந்நியர்களைப் போன்று நடத்தப்பட்டனர். புகைவண்டி நிலையங்கள், பூங்காக்கள், பொழுதுபோக்கு மைதானங்கள், பொது இடங்கள், அலுவலகங்கள் ஆகிய இடங்களில் இந்தியர் இழிவாக நடத்தப்பட்டனர். இந்திய அரசர்களும் ஆட்சியாளர்களும் அவமதிக்கப்பட்டனர். கற்றோரும் மற்றோரும் உதாசீனப்படுத்தப்பட்டனர். நீதிபதிகள் ரானடேயும் சந்தவார்க்கரும் சாதாரண ஆங்கிலேயப்படை வீரர்களால் புண்படுத்தப்பட்டனர். பொய்யர்கள், பொய்ச்சான்று கூறுவோர், கள்ளக் கையொப்பமிடுவோர், காட்டுமிராண்டிகள், பைத்தியக்காரர்கள் என்று வர்ணிக்கப்பட்ட இந்தியர்கள்தான் ஆங்கிலேய ஆட்சியாளர்கள், அதிகாரிகள், பணித்துறையாளர்களின் இன இறுமாப்புக் கொடுக்கால் கொட்டப்பட்டு தன்மானம் தலைதூக்க தேசிய உணர்வு பெற்று ஆங்கிலேய ஆதிக்கத்துக் கெதிராகக் கிளர்ந்தெழுந்தார்கள்.

**லிட்டன் பிரபுவின் அடக்குமுறைக் கொள்கை**

இந்திய வைசிராய் லிட்டன் பிரபு *(1876-1880)*வின் அடக்குமுறைக் கொள்கை எதிர்மறை விளைவைத் தந்தது. அரும்பாயிருந்த தேசியம் மலரத் துவங்கியது. நாடு கடுமையான பஞ்சத்தின் பிடியில் சிக்கிக்கிடந்தபோது லிட்டன் பிரபு படாடோபத்துடன் 'டெல்லி தர்பாரைக்' கோலாகலத்துடன் கொண்டாடினார் *(1877)*. இரண்டாவது ஆப்கானியப் போர் *(1878-80)* இந்தியக் கருவூலத்தைக் காலி செய்தது. தாய்மொழி பத்திரிக்கைச் சட்டம் (Vernacular Press Act 1878 ) இந்திய ஆயுதச் சட்டம் (Indian Arms Act, 1878) ஆகிய இரு சட்டங்களும் இந்தியரின் ஏகோபித்த எதிர்ப்பை தேடித்தந்தன. இந்தியப்

பொதுப்பணி (ICS)த் தேர்வுக்கான உச்ச வயது வரம்பை 21 லிருந்து 19 ஆகக் குறைத்தது பட்டதாரிகளின் எதிர்ப்பைக் கிளப்பியது. விஞ்ஞான பூர்வமான இந்திய எல்லையை வகுக்கப் பெரும் பொருள் செலவிடப்பட்டது. லங்காஷ்யர் துணி வியாபாரத்தை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு துணி இறக்குமதி வரியை நீக்கியது. இந்திய வணிகர்களின் சீற்றத்தைக் கிளறியது. லிட்டன் பிரபு செய்தவையும் செய்யாமல்விட்டவையும் இந்திய மக்களிடையே அரசாங்க எதிர்ப்புணர்ச்சியையும் தேசியத்தையும் வளர்த்துவிட்டன.

**இல்பர்ட் மசோதா எதிர்ப்பு**

ரிப்பன் பிரபு என்று அறியப்பட்ட ஜியார்ஜ் சாமுவேல் ராபின்சன் இங்கிலாந்தில் பல உயர் பதவிகளை வகித்தவர். இந்திய விவகாரச் செயலராக இருந்தவர் *(1866)*. *1880*ல் இவர் இந்தியாவின் வைசிராயாகப் பதவியேற்றார். ரிப்பன் பிரபு தாராளமனப்பான்மையுடைய ஜனநாயகவாதி. தலசுயாட்சியில் மிகுந்த அக்கறை கொண்டவர். இந்தியர்களுக்கு தல சுயாட்சியில் பயிற்சி அளிக்க வேண்டும் என்ற ஆர்வத்தில் இந்தியாவுக்கு வந்தார். பல சீர்திருத்தங்களைச் செய்தார். குறிப்பாக இவருக்கு முன் இருந்த லிட்டன் பிரபு கொண்டுவந்த இந்தியரின் ஏகோபித்த எதிர்ப்புக்குள்ளான தாய்மொழிப் பத்திரிகை சட்ட (Vernacular Press)த்தைத் தள்ளுபடி செய்தார். இவரது நான்காண்டு கால ஆட்சிக் காலத்தில் *(1880-84)* இல்பர்ட் மசோதா (Ilbert Bill)வைக்கொண்டு வந்ததன்மூலம் இந்தியரின் ஆதரவையும் ஆங்கிலேயரின் எதிர்ப்பையும் பெற்றார்.

ரிப்பன் பிரபு கொண்டு வந்த இல்பர்ட் மசோதா துணிகரமான திட்டமாகும். இம்மசோதாவை சி.பி.இல்பர்ட் என்ற சட்டத்துறை உறுப்பினர் தயாரித்ததால் இப்பெயர் பெற்றது. இந்த மசோதாவின் மூலம் இந்திய மாஜிஸ்ட்ரேட்டுகளும் நீதிபதிகளும் ஐரோப்பியரை விசாரிப்பதற்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடு நீக்கப்பட்டது. அதாவது குற்றம்சாட்டப்பட்ட ஐரோப்பியர்கள் நீதிமன்றத்தில் விசாரித்துத் தண்டிக்கும் உரிமை இந்தியர்களுக்கு முதன்முறையாக வழங்கப்பட்டது. இது 'இன அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட வேறுபாட்டை நீக்குவதற்கான முயற்சி' என்று குறிப்பிட்டுள்ளார் பேராசிரியர் ஆர். சத்தியநாதய்யர். ஐரோப்பிய நீதிபதிகளுக்கு இணையாக இந்திய நீதிபதிகளுக்கு கொடுக்கப்பட்ட இந்த சமஅந்தஸ்து குளவிக் கூட்டில் கைவிட்டது போலாயிற்று!

அறிவு பூர்வமான நியாயமான இல்பர்ட் மசோதா கல்கத்தாவிலும் இலண்டனிலும் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. 'இந்தியாவை

அடக்கி ஆளவேண்டுமென்ற இறைவனால் தீர்மானிக்கப்பட்ட இனத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரின் உள்ளத்து உணர்வையும் இம்மசோதா அவமதிக்கிறது' என்று கூறினார் இந்திய அரசாங்க வெளியுறவுச் செயலரான செடான் கேர் (Seton Kerr). இந்தியருக்கு இந்த அதிகாரத்தைக் கொடுத்தால் ஆயாவை அறைந்ததாகப் பொய்க் குற்றம்சாட்டி ஒரு வெள்ளை இனப்பெண்ணை சிறைக்கு அனுப்பிவிடுவர்' என்று மெரிடித் டௌன்ஷெண்டு (Meredith Townshend) என்பவர் 'ஸ்பெக்டேட்டர்' என்ற பத்திரிகையில் எழுதினார்.

இன உணர்வால் தூண்டப்பட்ட ஆங்கிலேயர் ரிப்பன் பிரபுவை ஆவசேத்துடன் விமர்சித்தனர். அரசாங்கப் பதவியில் இல்லாத ஐரோப்பியர் அவரைப் புறக்கணித்தனர். சூழ்நிலைக் கட்டாயத்தால் இல்பர்ட் மசோதாவில் மாற்றம் செய்யப்பட்டது. மாற்றம் செய்யப்பட்ட மசோதா அதன் மூல நோக்கத்தை நிறைவேற முடியாமல் செய்துவிட்டது. இல்பர்ட் மசோதா எதிர்ப்புமூலம் இந்தியர்களுக்கு ஒரு உண்மை தெளிவாகத் தெரிந்தது. அதாவது காலனி ஆட்சியில் இந்திய மக்களுக்கு நீதிகிடைக்காது என்பதைப் புரிந்து கொண்டனர். இந்திய தேசம் பலம்பெற இந்நிகழ்ச்சியும் பெரிதும் காரணமாக இருந்தது எனலாம்.